நினைத்துவிட்டார் போல் இருக்கிறது. அதேபோன்று மற்றொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார். பராமரிப்பைப் பொறுத்தவரை, பழைய பேருந்துகள் எல்லாம் அதிலே இருக்கின்றன என்று சொன்னார். நாம் பழைய பேருந்துகளை அடிக்கடி மாற்றிக் கொண்டேதான் வருகின்றோம். 7 இலட்சம் கிலோமீட்டர் ஓடினால் அந்தப் பேருந்துகளை மாற்ற வேண்டுமென்று அறிவுரை வழங்கி அதை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு 200 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். வருகின்ற ஜனவரி மாதத்திற்குப் பிறகு வரும் பட்ஜெட் கூட்டத் தொடருக்கு நீங்கள் வருகின்றபோது உல்லாசமான பேருந்திலே நீங்கள் வருகின்ற வாய்ப்பும் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, மோட்டல்கள் மூடப்படுகின்றன என்று சொன்னார்கள். இதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. தனியார் மோட்டல்களுக்கும், நம்முடைய மோட்டல்களுக்கும் செயல்பாட்டில் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. தனியார் மோட்டல்களுக்குச் செல்லுகின்றபோது அங்கே வருகின்றவர்களுக்குப் பல்வேறு சலுகைகள் அளிப்பது, அவர்களைக் கவனிக்கின்ற வகையில் பல்வேறு நிலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், நாம் மோட்டல் நடத்துகின்றபோது குறைந்த கட்டணத்திலே சிறப்பான உணவு வகைகளை வழங்க வேண்டும் என்று கருதுகின்றோம். அப்படிப்பட்ட நிலை இருக்கின்ற காரணத்தினால்தான் சில மோட்டல்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதையும் உடனடியாகத் திறப்பதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 47, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

47—

தமிழ்நாடு சரிகை நிறுவனத்தை விரிவுபடுத்தல்

***23963—திருமதி க. பழனியம்மாள்:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு சரிகை நிறுவனத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

1994 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு சரிகை நிறுவனத்தை விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலம்தான் நெசவாளர்களின் பொற்காலம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்று பல சலுகைகளை நெசவாளர்கள் பெற்று, அனுபவித்து வருகின்றார்கள். இந்தச் சூழ்நிலையில், சேலம் போன்ற இடங்களில் பட்டு நெசவு மிகவும் முன்னேறி வருகிறது. ஆனால், தமிழ்நாடு ஜரிகை நிறுவனமானது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவையை நான்கு சதவீதம்தான் பூர்த்தி செய்வதாகத் தெரிய வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான ஜரிகையை நல்ல தரத்துடனும், குறைந்த விலையிலும் வழங்கும் வகையில் அந்த ஜரிகை நிறுவனத்தை இன்னும் விரிவுபடுத்த அரசு எவ்வாறு முன்வரும் என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில்தான் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான 18 சதவீத உற்பத்தியை தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் செய்து வருகிறது. இப்போது இதில் இருக்கிற 'சில்க் த்ரெட்டை' நாம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். வெள்ளி இதழ் தயாரிப்பதற்கு நாம் சூரத்தின் உதவியை நாடிக் கொண்டிருக்கிறோம். புதிய இயந்திரங்களை நிறுவ நாம் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். அந்த இயந்திரங்கள் நிறுவப்பட்ட பிறகு அந்தப் பணி துரிதமாக நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் வழங்குகின்ற ஜரிகையைத் தவிர எஞ்சியுள்ளவற்றை தனியார்களிடமிருந்து நெசவாளர்கள் பெறுகின்றார்கள். அப்படி இருக்கும்போது அதனுடைய விலை, தரம் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது விதிமுறைகள் வைக்கப் பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலையைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டி, ஜரிகையின் தரம், விலையை நிர்ணயிக்கின்ற உரிமையைப் பெற்றிருக்கிறது. அந்தக் கமிட்டியில் சிறந்த சான்றோர்கள் அங்கத்தினர்களாக இருக்கின்றார்கள். அதனால் அதிக விலை ஏறாமல் தடுப்பதற்கு துறை தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 48, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

48—

பழைய சில்க்வார்பட்டி, விளாம்பட்டி வழி கொங்கபட்டி, எத்திலோடு சாலையைச் சீர் செய்தல்.

**20280—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பழைய சில்க்வார்பட்டி, விளாம்பட்டி வழி கொங்கபட்டி, எத்திலோடு சாலை சீர் செய்யும் பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பழைய சில்க்வார்பட்டி, விளாம்பட்டி வழி கொங்கம்பட்டி, எத்திலோடு சாலையை சீரமைப்பதற்காக ஒன்பது இலட்சத்து ஏழாயிரம் ரூபாய் மதிப்பீட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்புதல் அளிக்கப்பெற்றது இப்போது தான் தெரியும். அதேமாதிரி, அந்த ரோடு சீரமைக்கப்பட்டு வருவதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன், நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 49, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.